# அறிவியல் நகரம்

'உயர் கல்வித்துறை, தமிழ்நாடு அரசு

காந்தி மண்டபம் சாலை, பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மைய வளாகம்
சென்னை - 600 025.

**உ. சகாயம், இ.ஆ.ப.,**
**துணைத்தலைவர்**


கடித எண்.1005 /அறிவியல் நகரம் / சென்னை அறிவியல் விழா 2019 நாள்:11.12.2018

பெறுநர்

இயக்குநர்,
பள்ளிக் கல்வித்துறை,
டிபிஐ வளாகம்,
கல்லூரி சாலை, சென்னை – 6.

ஐயா / அம்மையீர்,

பொருள் : அறிவியல் நகரம், சென்னை – 25 – சென்னை அறிவியல் விழா 2019 – அறிவியல் வடிவமைப்புகளின் கருத்துருக்களை சமர்பிப்பது – தொடர்பாக.

----

அறிவியல் நகரம், "சென்னை அறிவியல் விழா" வினை கடந்த 11 ஆண்டுகளாக தொடர்ந்து சீரிய முறையில் நடத்தி வருகிறது. இவ்வாண்டு அறிவியல் நகரம், பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களை "சென்னை அறிவியல் விழா 2019" ல், அவர்களது அறிவியல் கண்டுபிடிப்பு வடிவமைப்புகளுடன் பங்கு கொள்ள அழைக்கிறது.

"சென்னை அறிவியல் விழா 2019" ன் முக்கியமான அம்சம் மாணாக்கர்கள் அறிவியலில் தங்களது புதிய கண்டுபிடிப்புகளின் வடிவமைப்புகளுடன் விழாவில் பங்கு கொள்ள வேண்டும் என்பதாகும். இவ்விழாவிற்கு மிகுந்த அளவில் அறிவியலாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் வருகை புரிவார்கள். மாணாக்கர்கள் தம் அறிவியல் கண்டுபிடிப்பின் மூலம் தங்களது திறமைகளை வெளிக் கொணர்வதற்கு இவ்விழா ஒரு நல்ல தளமாக அமையும்.

# அறிவியல் நகரம்

உயர் கல்வித்துறை, தமிழ்நாடு அரசு

காந்தி மண்டபம் சாலை, பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மைய வளாகம்
சென்னை - 600 025.


மாணாக்கர்கள் தங்களது அறிவில் வடிவமைப்புகளின் கருத்துருக்களை அறிவியல் நகரத்திற்கு முதலில் அனுப்பிட வேண்டும். அறிவியல் நகரம், தேர்ந்தெடுக்கப்படும் கருத்துருக்களுக்கான அறிவியல் வடிவமைப்புகளுடன் சென்னையில் 2019 பிப்ரவரி மாதம் இரண்டாம் வாரத்தில் நடைபெற இருக்கும் "சென்னை அறிவியல் விழா" வில் மாணாக்கர்கள் தங்களது ஆசிரியர்களுடன் பங்கு கொள்ள அழைப்பு விடுக்கும்.

விண்ணப்பப் படிவங்கள், தகுதிகள் மற்றும் விதிகளின் நகல்கள் தங்களின் பார்வைக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், இவைகள் அறிவியல் நகர இணைய தளம் www.sciencecitychennai.in ல் பதிவிறக்கம் செய்து கொள்ளும் வகையில் வழங்கப்பட்டுள்ளது. நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் அறிவியல் வடிவமைப்புகளை 10.01.2019 ஆம் தேதிக்குள் அறிவியல் நகரத்திற்கு முறையான வழியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும் (சமர்ப்பிக்க வேண்டிய வழி முறைகள் விண்ணப்பிக்க வேண்டிய அடிப்படை தகுதிகள் மற்றும் விதிகள் கொடுக்கப்பட்டுள்ளது).

இளம் மாணாக்கர்களின் கல்வி நலனுக்காக தாங்கள் தேவையான நடவடிக்கை எடுத்திடவும் மற்றும் தங்கள் அலுவலர்களுக்கு இது தொடர்பாக தகுந்த அறிவுரைகள் வழங்குமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

துணைத்தலைவர்

ந.க.எண். 077428/எம்/இ2/2018, நாள். 14.12.18

(நகல்) தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலருக்கு அனுப்பலாகிறது.

பள்ளிக்கல்வி இயக்குநருக்காக

பெறுநர்
அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி
அலுவலர்கள்.

# சென்னை அறிவியல் விழா 2019

## அறிவியல் வடிவமைப்பு, செயல்படும் விதம் மற்றும் அதன் பயன்பாடுகள்

## விண்ணப்பிக்க அடிப்படை தகுதிகள் மற்றும் விதிகள்

பள்ளிகள் :

தமிழ்நாட்டில், எட்டு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் மாணாக்கர்கள் பங்கு கொள்ளலாம்.

1. அறிவியல் விழாவில் பங்கெடுக்க அரசு /அரசு உதவி பெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள் என ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அதிகபட்சமாக ஐந்து அறிவியல் வடிவமைப்புகள் அறிவியல் நகரத்தால் வரவேற்கப்படுகிறது. இவைகள் அம்மாவட்டங்களின் முதன்மைக் கல்வி அதிகாரி அவர்களால் அறிவியல் நகரத்திற்கு பரிந்துரைக்கப்பட வேண்டும்.

   பரிந்துரைப்பது தொடர்பாக மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி அவர்களின் முடிவே இறுதியானது.

2. அறிவியல் விழாவில் பங்கெடுக்க சென்னை பள்ளிகளிலிருந்து (முன்னர் மாநகராட்சி பள்ளி) ஒரு மண்டலத்திற்கு மூன்று அறிவியல் வடிவமைப்புகள் அறிவியல் நகரத்தால் வரவேற்கப்படுகிறது. கல்வி அலுவலர் (கல்வி), சென்னை மாநகராட்சி அவர்களால் மேற்கண்ட அறிவியல் வடிவமைப்புகள் அறிவியல் நகரத்திற்கு பரிந்துரைக்கப்பட வேண்டும்.

   பரிந்துரைப்பது தொடர்பாக கல்வி அலுவலர் (கல்வி), சென்னை மாநகராட்சி அவர்களின் முடிவே இறுதியானது.

3. தமிழ்நாட்டிலுள்ள சி. பி. எஸ். இ. பள்ளிகள்:

   மத்திய அரசு / தனியார் பள்ளிகள் என ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அதிகபட்சமாக மூன்று அறிவியல் வடிவமைப்புகள் அறிவியல் நகரத்தால் வரவேற்கப்படுகிறது. இப்பள்ளிகளுக்கு மண்டல இயக்குநர் (மத்திய பள்ளிகள்), சென்னை அவர்களால் இந்த அறிவியல் வடிவமைப்புகள் அறிவியல் நகரத்திற்கு பரிந்துரைக்கப்பட வேண்டும்.

   பரிந்துரைப்பது தொடர்பாக அம்மண்டல இயக்குநர் அவர்களின் முடிவே இறுதியானது.

**பரிந்துரைக்கப்படாத அறிவியல் வடிவமைப்புகள் அறிவியல் நகரத்தால் நிராகரிக்கப்படும் மற்றும் கருத்துருக்களை திருப்பி அனுப்ப இயலாது.**

**அறிவியல் வடிவமைப்புகளை அமைக்கும் முறைகள்:**

அ. அமைக்கப்படும் அறிவியல் வடிவமைப்புகள் அறிவியலின் புதிய கண்டுபிடிப்பாகவோ / பயன்பாட்டு அறிவியலின் ஒரு புதிய கண்டுபிடிப்பாகவோ / பழைய கண்டுபிடிப்பின் புதிய பரிமாணமாகவோ / பழைய கண்டுபிடிப்பின் செயல்முறை விள்க்கங்கள் புதிய பரிமாணமாகவோ / அறிவியல் உண்மைகளை விளக்கக்கூடிய செயல்பாடுகளாகவோ இருக்க வேண்டும்.

ஆ. அமைக்கப்படும் அறிவியல் வடிவமைப்புகள் அறிவியலின் எந்தவொரு துறையிலும் இருக்கலாம்.

இ. அமைக்கப்படும் அறிவியல் வடிவமைப்புகள் குறைந்த செலவில் பெரும் அளவில் சமூகத்திற்கு பயன் தரக்கூடியதாகவும், எந்த நிலையிலும் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ சமூகத்திற்கு / சுற்றுப்புறத்திற்கு தீங்கு விளைவிக்காதவையாகவும் இருக்க வேண்டும்.

ஈ. அதிகபட்சம் இரண்டு பேர் கொண்ட குழுக்களோ அல்லது தனி ஒருவராகவோ அறிவியல் வடிவமைப்புகளை அமைக்கலாம்.

**II. அறிவியல் வடிவமைப்பிற்கான கருத்துருவை சமர்ப்பிக்கும் வழி முறைகள்:**

அறிவியல் நகரத்தின் இணைய தளம் www.sciencecitychennai.in என்ற முகவரியில் விண்ணப்பப்படிவம், அடிப்படை தகுதிகள் மற்றும் விதிகளை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பதிவிறக்கம் செய்த விண்ணப்பத்தினை நிரப்பி பரிந்துரைக்கப்பட்டவரின் அலுவலகம் வாயிலாக துணைத்தலைவர், அறிவியல் நகரம், காந்திமண்டபம் சாலை, சென்னை – 600 025 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

மாணாக்கர்கள் தங்களது அறிவியல் வடிவமைப்புகளின் நோக்கம், வரைப்படம் / நிழற்படம் மற்றும் அதன் பாகங்கள், தேவைப்படும் உபகரணங்கள், செயல்படும் விதம், செயல்படுத்த ஆகும் செலவினங்கள் ஆகியவற்றை தெளிவாக 200 வார்த்தைகளுக்கு மிகாமல் தமிழ் அல்லது ஆங்கிலத்தில் எழுதி சமர்ப்பிக்க வேண்டும்.

மாணாக்கர்கள் முன் வைத்திருக்கும் தங்களது அறிவியல் படைப்பினால் சமுதாயத்திற்கு ஏற்படும் பயன்களை 100 வார்த்தைகளுக்கு மிகாமல் தமிழ் அல்லது ஆங்கிலத்தில் கையெழுத்து பிரதி (அல்லது) தட்டச்சு செய்து இணைக்க வேண்டும்.

கருத்துருவினை மட்டுமே அறிவியல் நகரத்திற்கு அனுப்ப வேண்டும். எக்காரணம் கொண்டும் அறிவியல் வடிவமைப்புகளை அனுப்பக்கூடாது. தேர்ந்தெடுக்கப்படும் கருத்துருவிற்கு அறிவியல் விழாவில் கலந்து கொள்ள அறிவியல் நகரத்திலிருந்து அழைப்பு விடுக்கும் போது மட்டுமே அறிவியல் வடிவமைப்புகளை மாணாக்கர்கள் எடுத்து வரலாம்.

III. **தேர்ந்தெடுக்கும் முறைகள் மற்றும் பரிசுகள்:**

- அறிவியல் நகரத்தில் அறிவியல் வடிவமைப்புகள் தேர்வுக்குழுவின் மூலம் பரிசீலிக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த அறிவியல் வடிவமைப்புகளை அறிவியல் விழாவின் காட்சிக்கூடங்களில் அமைப்பதற்கு மாணாக்கர்கள் மற்றும் அவர்களது ஆசிரிய பெருமக்கள் அறிவியல் நகரத்தால் அழைக்கப்படுவர்.
- அறிவியல் விழாவின் காட்சிக் கூடங்களில் வைக்கப்படும் அறிவியல் வடிவமைப்புகளை சிறந்த அறிவியல் வல்லுநர்கள் குழு மாணாக்கர்களுடன் கலந்து உரையாடி அவர்களது அறிவியல் வடிவமைப்புகள் செயற்படும் விதங்கள், சமுதாயத்திற்கு ஏற்படும் பயன்கள் மற்றும் அறிவியலின் பல சிறப்பு அம்சங்களையும் ஆராய்வார்கள். துணைத்தலைவர், அறிவியல் நகரம் அவர்களின் தலைமையில் அறிவியல் வல்லுநர் குழுவுடன் கூட்டம் நடத்தப்பட்டு சிறந்த அறிவியல் வடிவமைப்புகளை தேர்ந்தெடுத்து அறிவியல் விழாவில் அவர்கள் சிறப்பிக்கப்படுவர்.
- வெற்றி பெற்ற மாணாக்கர்கள் மற்றும் அவர்களது ஆசிரியர்களுக்கு முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகள் அறிவியல் விழாவின் நிறைவு நிகழ்ச்சியின் போது வழங்கப்படும்.
- அறிவியல் விழாவில் காட்சிக் கூடங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட அறிவியல் வடிவமைப்புகளை வைக்க சென்னை அல்லாது மற்ற இடங்களில் இருந்து வரும் மாணாக்கர்கள் மற்றும் அவர்களது ஆசிரியர்களுக்கு உறைவிடச் செலவு, உணவு, இரண்டாம் வகுப்பு படுக்கை வசதியுடன் கூடிய இரயில் கட்டணம் அல்லது அதற்கு இணையான பேருந்து கட்டணம் அறிவியல் நகரத்தால் ஏற்றுக்கொள்ளப்படும்.
- காட்சிக் கூடங்களில் அறிவியல் வடிவமைப்புகளை அமைத்து போட்டியில் கலந்துக் கொண்டு பரிசு பெறாத மாணாக்கர்களுக்கும் அவர்களது ஆசிரியர்களுக்கும் அறிவியல் விழாவில் பங்கு கொண்டதற்கான சான்றிதழ்கள் வழங்கப்படும்.

J. Ganesan
11/12/18

1/12/18

துணைத்தலைவர்

# சென்னை அறிவியல் விழா 2019

## அறிவியல் வடிவமைப்பு, செயல்படும் விதம் மற்றும் அதன் பயன்பாடுகள்

## பள்ளிகளுக்கான விண்ணப்பப்படிவம்

| வ. எண் | பொருளடக்கம் | மாணாக்கர் (1) | மாணாக்கர் (2) |
|---|---|---|---|
| 1 | மாணாக்கரின் பெயர் | | |
| 2 | மாணாக்கரின் புகைப்படம் மற்றும் புகைப்படத்தின் மேல் மாணாக்கர்களின் கையெழுத்து | | |
| 3 | படிக்கும் வகுப்பு மற்றும் பட்டியல் எண் | | |
| 4 | பிறந்த தேதி | | |
| 5 | பள்ளியின் பெயர் மற்றும் அஞ்சல் முகவரி | | |
| 6 | பள்ளியின் தொலைபேசி / நிகரி எண்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரி | | |
| 7 | மாணாக்கரின் பயிற்று மொழி | | |
| 8 | உதவி புரிந்த ஆசிரியரின் பெயர் / அலைபேசி / பள்ளியின் பெயர் மற்றும் அஞ்சல் முகவரி | | |
| 9 | வடிவமைக்கப்பட்டுள்ள அறிவியல் வடிவமைப்பின் துறை | | |
| 10 | அறிவியல் வடிவமைப்பு மற்றும் அது செயல்படும் விதம் | அமைக்கப்பட்டுள்ள அறிவியல் வடிவமைப்பு புதிய கண்டுபிடிப்பு / பயன்பாட்டு அறிவியலின் ஒரு புதிய கண்டுபிடிப்பு / பழைய கண்டுபிடிப்பின் புதிய பரிமாணம் / பழைய கண்டுபிடிப்பின் செயல்முறை விளக்கங்கள் புதிய பரிமாணம் / அறிவியல் உண்மைகளை விளக்கக்கூடிய செயல்பாடுகள் | |

11. அறிவியல் வடிவமைப்புகளை முன் வைக்கும் முறைகளை 200 வார்த்தைகளுக்கு மிகாமல் தமிழ் அல்லது ஆங்கிலத்தில் கையெழுத்து பிரதி (அல்லது) தட்டச்சு செய்து இணைக்க வேண்டும்.

முன் வைத்திருக்கும் தங்களது அறிவியல் படைப்பினால் சமுதாயத்திற்கு ஏற்படும் பயன்களை 100 வார்த்தைகளுக்கு மிகாமல் தமிழ் அல்லது ஆங்கிலத்தில் கையெழுத்து பிரதி (அல்லது) தட்டச்சு செய்து இணைக்க வேண்டும்.

இணைக்கப்பட்ட தாளில் பரிந்துரைக்கப்படுபவர் கையொப்பம் இட வேண்டும்.

12. செல்வி / செல்வன்----------------------- என்கின்ற என்னால் / எங்களால் மேற்கூறப்பட்ட தகவல்கள் மற்றும் கண்டுபிடிப்புகள் எங்களது ஆசிரியர் திரு/திருமதி ------------------------- அவர்களது மேற்பார்வையில் செய்யப்பட்டது என்று உறுதியளிக்கின்றேன் / உறுதியளிக்கிறோம்.

மாணாக்கர்/கள் கையொப்பம்

1.

2.

13. மேற்கண்ட அறிவியல் மாதிரியினை செல்வி / செல்வன்----------------------------- ஆகியோரால் எனது மேற்பார்வையில் வடிவமைக்கப்பட்டு செயல்பட வைத்தார்கள் என்று உறுதியளிக்கின்றேன்.

ஆசிரியரது கையொப்பம்

தலைமையாசிரியர் கையொப்பம்

முதன்மைக் கல்வி அதிகாரி/

மண்டல இயக்குநர் / இணை ஆணையர் (கல்வி)

11/12/18

# CHENNAI SCIENCE FESTIVAL 2019

## WORKING SCIENCE MODELS AND THEIR USES

## ELIGIBILITY AND, RULES AND REGULATIONS FOR SUBMISSION

(Schools)

**Government, Government aided and Private schools in Tamil Nadu**

Students who are studying eighth standard and above are eligible to participate.

A total of five science models from each District will be accepted by the Science City. Science City will accept five models from Government, Government aided and Private schools. The Chief Educational Officer will select five models from his / her respective District and recommend the selected models to the Science City.

The Chief Educational Officer is having responsibility of selecting five models from the District of his/her jurisdiction and decision taken by him/her is the final one.

**Chennai Schools (formerly Corporation Schools)**

A total of three science models from each division will be accepted by the Science City. The Joint Commissioner (Education) will select three models from each division of Chennai Schools and recommend the selected models to the Science City.

The Joint Commissioner (Education) is having responsibility of selecting three models from each division and decision taken by him/her is the final one.

**CBSE schools in Tamil Nadu**

A total of 3 science models from each District will be accepted by the Science City. Science City will accept 3 models each from Government / Private schools. The Regional Director, CBSE schools, Chennai will select 3 models from each District and recommend the selected models to the Science City.

The Regional Director, CBSE schools, Chennai is having responsibility of selecting 3 models from each District and decision taken by him / her is the final one.

I. **Method of preparation of Science Models:**

1) The models should self-explain and should be with either one of the following aspects given below :

a. Any new finding

b. New finding in any application science

c. New dimension of old innovation / finding

d. May explain practical application of old innovation / finding

e. May explain scientific concepts

2) Science models may be of any scientific discipline

3) Science models should have concepts of economically viable and provide maximum benefit to society and should not affect environment/society (neither directly nor indirectly)

4) Science models may be prepared individually or jointly but not more than two students

**II. Method of submission of abstracts:**

Application form along with copy of rules and regulations can be downloaded from Science City's official website www.sciencecitychennai.in. The filled and completed application forms should be submitted to the Science City, Gandhimandapam Road, Chennai - 600025 through proper channel with nomination/recommendation of concerned authorities as described above.

Applicant should submit their abstract within 200 words. The abstract should explain the aim of the models, drawing/photograph of its parts, materials and equipment's required method of functioning and estimated cost of implementation.

Applicant should submit a brief write-up on the benefit/use of their models to the society. The write-up may be in Tamil or in English and clearly hand written or electronically or computer typed (not more than 100 words).

Applicant should only submit the abstract at this stage and should not submit their physical science model. The selected applicants will be informed and asked to display their models only on the occasion of Science Festival **2019.**

**III. Selection procedure and Prizes:**

- All the application will be scrutinized by the selection committee at the office of the Science City and selected candidate along with Teacher who guided the student will be invited to set-up and display their models at the exhibition stall during Science Festival.

- Science City will constitute an expert committee to evaluate each and every model through interaction with student/students about their model, method of functioning, benefit to society, special features, etc. The expert committee will have a meeting headed by the Vice Chairman, Science City to finalize the winners and the prize winners will be honored at the function.
- Prizes for winners and their Teachers (First, Second and Third) will be distributed at the function at the closing ceremony.
- Participants and Teachers from various places other than Chennai those who are displaying science models at the Science Festival are eligible to receive second class (sleeper) train fare / equivalent bus fare and Science City will provide accommodation and food.
- Students and Teachers who participated and displayed their models in the competition other than prize winners, will also receive individually a certificate on their participation in the Festival.

11/12/18

**Vice Chairman**

11/12/18

# Chennai Science Festival 2019

## Working Science Models and their uses

## School Application Form

| S.No. | Particulars | Student (1) | Student (2) |
|---|---|---|---|
| 1 | Name of the Student | | |
| 2 | Student's photo with signature | | |
| 3 | Student Roll No. & Class | | |
| 4 | Date of Birth | | |
| 5 | School Name and Address / Phone No. / Fax No. / email id | | |
| 6 | Medium of Instruction | | |
| 7 | Name and Designation of the Teacher / address / mobile No. who assisted the student | | |
| 8 | Discipline of the science model | | |
| 9 | Design and the method of working of the Science Model | Any new finding / New finding in application orientated science / New dimension of old innovation/finding / May explain practical application of old innovation/finding / May explain scientific concepts | |

10. Applicant should submit their abstract not more than 200 words. The write-up may be in Tamil or English and either clearly and legibly handwritten or electronically or computer typed.

    Applicant should submit a brief write-up on the benefit/use of their models to the society. The write-up may be in Tamil or in English and either clearly and legibly hand written or electronically or computer typed (not more than 100 words).

    The abstract should be attested by the concerned authorities

A7

11. I / We ---------------------------------------------------------------- declared that the above scientific model was done by me under the supervision of Thiru /Tmt ----------------------------------------------------------------

Student's signature

1.

2.

12. I declared that Selvan / Selvi -------------------------------------------------------- has executed the above science model under my supervision.

Signature of the Teacher

Signature of the Principal

Chief Education Officer / Regional Director / Joint Commissioner (Education)

J. Ba[illegible] 11/12/18